சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.163/2017

**PW 1 சரஸ்வதி** 06.06.2025

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்து போனவர் என்னுடைய மகன் என்று சொன்னால் அது சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார் என்று சொன்னால் அது சரிதான். கிணத்துக்கடவு பாலத்தில் மேற்புறத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி எனது மகன் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்று சொன்னால் அது சரிதான். வடக்கிலிருந்து வாகனங்கள் வர வேண்டும் என்றால் பாலத்திற்கு கிழபுறமாக வரவேண்டும் என்று சொன்னால் சரிதான். ஆம்புலன்ஸ் வாகனமானது பாலத்திற்கு மேற்புறம் பொள்ளாச்சியிலிருந்து கோயமுத்தூருக்கு சென்றது என்றால் சரிதான். எனது மகன் ஒரு வழி பாதையில் தவறாக சென்ற காரணத்தால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. எனது மகன் வர வேண்டிய வழியில் சரியாக வந்திருந்தால் விபத்து ஏற்பட்டியிருக்காது என்று சொன்னால் அது சரியல்ல. எனது மகன் ஜெயந்தி இந்தியன் புரெக்டெஸ் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தாரா என்றால் சரிதான். எனது மகன் வருமான வரி கட்டி வந்தரா என்றால் கட்டியிருப்பார். வருமான வரி கட்டி வந்ததை பொருத்து ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சம்பள சான்று வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அது சரியல்ல. உண்மையிலேயே எனது மகன் மேற்கண்ட கம்பெனியில் வேலை பார்த்து வந்திருந்தால் அந்த நிறுவனம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை

விசாரித்திருக்கலாம் என்றும் அவ்வாறு விசாரிக்காத காரணத்தினால் சம்பள சான்று ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. எனது மகனின் அஜாக்கிரதையின் காரணமாக விபத்தின் காரணமாக 3ம் மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டாளரை கட்சி சேர்க்காத காரணத்தினால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி